# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1789 - 2012 දෙසැම්බර් මස 14 වැනි සිකුරාදා - 2012.12.14

*1789 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கீழ் மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்ரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கீழ் மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்ரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 252 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.***- (i) அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

***கவனிக்க.***- (i) இவ்வர்த்தமானியின் பகுதி V இல் 2009 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (ஒற்றோபர்-திசெம்பர்) புத்தகப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகிறது.

***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

### *முக்கிய அறிவித்தல்கள்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, சனவரி மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு யுன் மாதம் 23 ஆந் திகதி.

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/34934.
பிரதிக் காணி ஆணையாளரின்
இலக்கம் : දෙබ/3/5/1.

## 21 (2) ஆவது அரச காணி ஒழுங்குவிதிகளின்கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

ஹம்பாந்தோட்டை மாவட்டம், லுணுகம்வெஹெர பிரதேச செயலாளர் கோட்டத்திற்குட்பட்ட 77 ஆம் இலக்க, சாலியபுர கிராம சேவை அலுவலர் பிரிவில் சாலியபுர கிராமத்தில் LC/LNG/2011/09 ஆம் இலக்க துணைப்பட்டியலில் 8 என அறியப்படும் 01 ஏக்கர் பரப்பளவு கொண்ட காணித்துண்டு வர்த்தக நடவடிக்கைகளின் பொருட்டு (கல் கெஷர் ஒன்று பொருத்துவதற்கு) திரு. ராஜபக்ஷ முதியான்சலாகே வணிகரத்ன என்பவரால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

2. கோரப்பட்டுள்ள காணியின் எல்லைகள் கீழே தரப்பட்டுள்ளன :

வடக்கு : 60 ஆம் இலக்க காணித்துண்டு மற்றும் நுழைவாயில் ;
கிழக்கு : அ. பூ. பி. 2/7441 ;
தெற்கு : அ. பூ. பி. 2/7441 ;
மேற்கு : 60 ஆம் இலக்க காணித்துண்டின் ஒரு பகுதி.

3. கோரப்பட்டுள்ள காணியை தேவையான விடயத்தின் பொருட்டு குத்தகைக்கு விட முடியும். அதனால் அரசு சம்மதிக்கும் பிற நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு விட விரும்புகின்றது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது ஆண்டுகள் (30) (2012.08.12 முதல்) ;

**வருடாந்த குத்தகைப் பணம்**.- தலைமை மதிப்பீட்டாளரின் அளவீட்டுக்கு அமைய 2012 ஆம் ஆண்டின் சந்தைப் பெறுமதியில் 4% ஆகும். இந்தக் குத்தகைப் பணம் ஒவ்வோர் 5 ஆண்டுக்கு ஒரு முறை திருத்தம் செய்யப்படும். அது முன்னைய 05 ஆண்டின் இறுதியில் அறவிடப்பட்ட தொகையில் 50% வீதத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும்;

தண்டப்பணம்.- காணியின் உயர் பெறுமதியில் 4% வீதத்தைப் போல மும்மடங்கு தொகை ;

(ஆ) குத்தகை எடுப்போரால் குத்தகை ஆரம்பமான திகதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனதைக் கவரும் வண்ணம் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் ;

(இ) குத்தகை எடுப்போரால் இந்த காணி வர்த்தக செயற்பாடுகள் தவிர்ந்த வேறு எந்த செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படலாகாது ;

(ஈ) பிரதேச செயலாளர்/ஸ்கோபின் குழு/இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் பல நிறுவனங்களால் விதிக்கப்படும் பல விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உடன்படிக்கை கீழ்படிய வேண்டும் ;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் மிகவும் அபிவிருத்தி செய்யப்பட்ட நிலையில் பேணப்படல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகை கொடுக்கப்பட்டுள்ள காலத்தில் குத்தகையாளரால் காணிபெற்றுக்கொண்ட காரணத்தை குறித்த காலத்துக்குள் நிறைவேற்றிக் கொள்வதில் அசமந்தப் போக்கு காணப்படுமாயின், குத்தகையை முடிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் ;

(எ) 05 ஆண்டு காலம் முடிவடையும் முன்னர் இரண்டாவது குத்தகை கொடுக்க முடியாது ;

(ஏ) குத்தகைப் பணத்தை தவறாமல் செலுத்த வேண்டும். குத்தகை செலுத்தத் தவறும் பட்சத்தில் உடன்படிக்கை தானாகவே வலுவற்றதாகி விடும்.

இதன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து 06 கிழமைக்குள் குறிப்பிட்ட காணியை குத்தகைக்கு கொடுக்கக்கூடாது என்பதற்கான ஏற்றுக்கொள்ளத்தக்க காரணிகளை எழுதி என்னிடம் சமர்ப்பிக்காது விட்டால், கோரிக்கைக்கு ஏற்ப காணி குத்தகைக்குக் கொடுக்கப்படும்.

புபுதி பிரேமதாச,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2012.11.21.

12-288